**செ.வெ. எண்: 532** **நாள்: 10.09.2012**

<u>பத்திரிகைச் செய்தி</u>

**சென்னை மாவட்டக் கலை மன்றம் வாயிலாக சிறந்த கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்குதல்**

## <u>கலை பண்பாட்டுத் துறையின் அறிவிப்பு</u>

தமிழ்நாட்டின் கலைப் பண்புகளை மேம்படுத்தவும், பாதுகாப்பு நோக்கிலும், கலைஞர்களின் கலைத்திறனை சிறப்பிக்கும் வகையிலும், கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செயல்பட்டு வரும் மாவட்டக் கலை மன்றங்களின் வாயிலாக மாவட்ட அளவில் 2002–2003ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வயது மற்றும் கலைப் புலமையின் அடிப்படையில் சிறந்த 5 கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையின்படி ஆண்டுக்கு 5 விருதுகள் வீதம் 2002–2003ஆம் ஆண்டு முதல் 2011–2012ஆம் ஆண்டு வரையில் 50 கலைஞர்களுக்கு கலை விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

சென்னை மாவட்டக் கலை மன்றத்தின் வாயிலாக இயல், இசை, நாடகம் முதலிய கலைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கிட கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தேர்வாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த குரலிசை (சங்கீதம்), பரதநாட்டியம், கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், பாவைக்கூத்து, தோல்பாவை, நையாண்டி மேளம், கரகாட்டம், காவடி, பொய்க்கால்குதிரை ஆட்டம், மரக்கால் ஆட்டம், கோல்கால் ஆட்டம், கழியல் ஆட்டம், கணியான் கூத்து, ஓவியம், சிற்பம், அரசன் அரசி ஆட்டம், புலி ஆட்டம், காளை ஆட்டம், மானாட்டம், பாம்பாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், ஆழியாட்டம், கைச்சிலம்பாட்டம், சிலம்பாட்டம் (வீரக்கலை), வில்லிசை முதலிய செவ்வியல் கலைகள், நாட்டுப்புறக் கலைகள் என அனைத்து வகை முத்தமிழ் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## கலை விருதுகளுக்கான விவரங்கள்

| வ. எண் | வயது | விருது |
|---|---|---|
| 1. | 18 வயதும் அதற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை இளமணி |
| 2. | 19 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை வளர்மணி |
| 3. | 36 வயது முதல் 50 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலைச் சுடர்மணி |
| 4. | 51 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட கலைஞர்களுக்கு | கலை நன்மணி |
| 5. | 61 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு | கலை முதுமணி |

வயது மற்றும் கலைப் புலமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கலைஞர்களுக்கு தலா ரூ. 2,000/–க்கான பொற்கிழியும், ரூ. 500/– மதிப்பிற்கான பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும்.

மேலும், தேசிய விருதுகள், மாநில விருதுகள் (கலைமாமணி), கலைச்செம்மல் விருதுகள் மற்றும் ஏற்கெனவே மாவட்டக் கலை மன்றத்தின் விருதுகளைப் பெற்ற கலைஞர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பம் செய்யக்கூடாது.

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்று, வயது, முகவரி (தொலைபேசி எண்ணுடன்) மற்றும் கலை அனுபவ சான்றிதழ்களின் நகல்களுடன் **"துணை இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை, தமிழ் வளர்ச்சி வளாகம், இரண்டாவது தளம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை–600008"** என்ற முகவரிக்கு 25.09.2012க்குள் விண்ணப்பிக்குமாறு கலை பண்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

முதன்மைச் செயலாளர் / ஆணையருக்காக
கலை பண்பாட்டுத் துறை,
சென்னை 600 008

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**